கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016
(யூன் 2017)

## PYS 4143 அறிகை நிலை விஞ்ஞான மெய்யியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி – I

01. (அ) "அறிகைநிலை விஞ்ஞானம் தன்னுள் பல்வேறு பிரிவுகளை இணைத்துக் கொண்டு செயல்படும் துறையாகும்." இக்கூற்றினை தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

(ஆ) அறிகைநிலை விஞ்ஞானம் தொடர்பாக மெய்யியல் முன் வைக்கும் விமர்சனங்களை கூறுக.
(10 புள்ளிகள்)

02. (அ) அறிவியலின் முக்கிய கூறுகள் தொடர்பாக தோமஸ்கூன் முன்வைத்த விடயங்கள் எவ்வாறு அறிகைசார் மனித பரிணாம விருத்தியில் பிரதிபலிக்கின்றது என்பதை தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

(ஆ) குறியீட்டிற்கு முற்பட்ட மொழி மற்றும் குறியீட்டு மொழி என்பவற்றின் விருத்தியினை ஹோமோ ரெக்டஸ் மற்றும் ஹோமோ சேபியன் ஆகிய இனங்களை ஒப்பிட்டு ஆராய்க.
(10 புள்ளிகள்)

03. (அ) அறிகைசார் நரம்பியல் விஞ்ஞானம் எவ்வாறான பங்களிப்பினை அறிகைசார் விஞ்ஞானத்திற்கு வழங்குகின்றது என்பதை விபரிக்குக.
(15 புள்ளிகள்)

(ஆ) அறிகைசார் மொழியியலுக்கு நொவாம் சொம்ஸ்கியின் பங்களிப்பினை சுருக்கமாக விபரிக்குக.
(10 புள்ளிகள்)

04. (அ) பாரம்பரிய விஞ்ஞான அறிவில் இருந்து விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்தமையை அறிகைசார் விஞ்ஞானப் பின்னணியை ஆதாரமாக கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஆதிகால மனிதர்களின் கருவி உற்பத்தி மற்றும் அதன் உபயோகங்களில் அறிகைசார் விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துக.

(08 புள்ளிகள்)

(இ) 17 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு விஞ்ஞானத்தில் அதிகாரம் ஏற்படுத்திய தாக்கங்களை பரிசீலிக்குக.

(07 புள்ளிகள்)

## பகுதி – II

05. உளவியலில் செயற்பாட்டு வாதம் மற்றும் நடத்தை வாதம் ஆகியன அறிகைசார் விஞ்ஞானத்தின் தோற்றத்திற்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை அறிகைசார் விஞ்ஞானத்தின் இயல்பு, பரப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவானது மனித நுண்ணறிவை மிஞ்சி விடுமா என்பதை மெய்யியல் நோக்கில் பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)

*****